நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம்

திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU)

வெற்றிடங்கள்

01. திட்ட விபரம்:

கொழும்பு துறைமுக நகரம் என்பது இலங்கையின் சுறுசுறுப்பான வர்த்தகத் தலைநகரமான கொழும்பின் மத்திய வர்த்தக பகுதியின் விரிவாக்கமாகக் கடலிலிருந்து மீட்கப்பட்ட நிலத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய நகர அபிவிருத்தித் திட்டமாகும். கடலிலிருந்து மீட்கப்பட்ட 269 ஹெக்டேயர் நிலப்பரப்பில் அமைந்துள்ள கொழும்பு துறைமுக நகரம், இந்து சமுத்திரத்தின் வெதுவெதுப்பான கடல் நீரையொட்டிய சிறப்பான திட்டமிடப்பட்ட நகர வாழ்க்கையை வழங்கும் வகையில், தெற்காசியாவின் முதன்மையான குடியிருப்பு, சில்லறை வர்த்தகம் மற்றும் வர்த்தக மையமாகத் திகழவுள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை ஒருங்கிணைத்தல், முகாமைத்துவம் செய்தல், அவதானித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய பணிகளுக்காக திட்ட முகாமைத்துவப் பிரிவு (Project Management Unit) ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

02. நிரப்புவதற்கு வெற்றிடமாக உள்ள பதவி நிலை:

வ./ இ	பதவி	02/2026 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி சம்பளப் பிரிவு	வெற்றிடங்களின் எண்.
01.	திட்டப் பணிப்பாளர்	பிரிவு - A	01

03. தேவையான தகைமை

2026.03.28 ஆம் திகதிய 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி மேலுள்ள பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு பின்வரும் தகைமைகளில் குறைந்தது ஒன்றை விண்ணப்பதாரர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இல.	பதவி/ கள்	சம்பளப் பிரிவு	தகைமை
01	திட்டப் பணப்பாளர்	பிரிவு - **A**	(கீழுள்ள 1 அல்லது 2) (1) ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல், கணிய அளவீடு, கட்டிடக் கலை, நகர திட்டமிடல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம்/ இணை அங்கத்துவம்/ தொடர்புடைய துறையில் தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து இதனையொத்த தொழில்முறை தகைமையை பெற்றிருத்தல் அத்துடன் முகாமைத்துவ தரத்தில் தொடர்புடைய துறையில் குறைந்தது 12 ஆண்டுகள் அனுபவம். அதில் 06 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரம் ஒன்றில் இருத்தல் வேண்டும். (2) தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து பெறப்பட்ட கூட்டு/ சக அங்கத்துவம் அத்துடன் முகாமைத்துவ தரத்தில் தொடர்புடைய துறையில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம். அதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரம் ஒன்றில் இருத்தல் வேண்டும்.

04. பொது நிபந்தனைகள்-:

விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் குற்றவியல் தொடர்பான எவ்விதக் களங்கமுமற்ற பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றத்தினால் எந்தவொரு குற்றவியல் குற்றத்திற்காகவும் தண்டிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

64 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒருவரும் இந்தத் திட்டத்தில் ஆட்சேர்ப்பதற்கு கருத்தில்கொள்ளப்பட மாட்டார்கள்.

05. சம்பளம்-:

2026.03.28 ஆம் திகதிய 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் தொடர்புடைய மற்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்பட்டவாறு சம்பளம் வழங்கப்படுவதோடு தொடர்புடைய சுற்றுநிருபங்களின்படி கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகளை பெறுவதற்கு உரிமை பெறுவார்.

06. விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகள்-:

அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 2:3:3 ஆம் இலக்க பந்தியின் (b) பொருந்துவதோடு அரச சேவையில் இல்லாத விண்ணப்பதாரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள். அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

07. விண்ணப்பங்கள்-:

அரச/ அரசு சாரா நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவன தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும் என்பதோடு, நேரடியாக சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்களுடன் கீழ் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு 2026 டிசம்பர் 08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

மின்னஞ்சல் முகவரி: psportcity@gmail.com